Version tamoule
2e édition – août 2010

# மாணவரின் வேலையின் மதிப்பீடு

## பெற்றோருக்கான தகவல்கள்

canton de vaud
LIBERTÉ ET PATRIE

Département de la formation,
de la jeunesse et de la culture

dgeo
Direction générale de l'enseignement obligatoire

«பிள்ளைகளின் திறமையை ஊக்குவித்து, அவர்கள் வாழும் சமூகத்தில் பங்கேற்பதற்கு. ஒவ்வொரு பிள்ளையின் உரிமை என்னவென்றால் கல்வி கற்றுக்கொள்வதும், புத்தி ஒழுக்கத்தை கடைப்பிடிப்பதும்.»

**வோ மாநில சட்டம் 36**

© État de Vaud – DFJC – Direction générale de l’enseignement obligatoire

# பொருளடக்கம்

1. ஏன் மதிப்பீடு செய்வது? 5

2. என்னத்தை மதிப்பிடுவது? 6

3. எப்படி மதிப்பிடுவது? 6

4. எப்படி முக்கியமான பரீட்சை முடிவுகளை தெரிவிப்பது? 8

5. மாணவர்கள் வகுப்பை கடக்கும் பொழுது எப்படி முடிவுகள் எடுக்கப்படும்? 9

6. சில விசேடமான நிலைமைகள 11

7. ஆவணங்கள் 11

8. பெற்றோரின் உரிமைகள் என்ன? 12

9. பெற்றோரிடமிருந்து பாடசாலை எதிர்பார்பது என்ன? 13

10. தனியார் பாடசாலையிலிருந்து எப்படி அரசாங்க பாடசாலைக்கு செல்வது பற்றிய விளக்கம். 13

## சேர்க்கப்படும் தகவல்கள்

எங்கே விபரங்களை சேர்ப்பது ? 14

அகராதி 15

வோ மாநில பாடசாலையின் மாதிரி 16

# முகவுரை

அன்பான பெற்றோர்கள்,

ஆவணி மாதம் 1ம் திகதி 2005 ஆண்டு மாணவருக்கான புதிய கணிப்பீட்டு திட்டம் தொடங்கியது இதே நேரம் பாடசாலையுடன் தொடர்புள்ள சட்டங்களில் வேறு மாற்றங்களும் ஏற்பட்டது.

மாணவரின் வேலையினுடைய மதிப்பீடு என்ற ஒரு சிறு புத்தகத்தால் உங்களுக்கு தேவையான விளக்கங்களையும் பாடசாலை தங்கள் விருப்பத்தையும் கட்டாயத்தையும் வலியுறுத்தலையும் தெரிவிக்கும். இதனால் நீங்கள் மாணவருடைய பாடசாலை காலத்தை அவர்களுடன் கூட விரிவாக பின் தொடரலாம்.

இந்த சட்டத்தால் பாடசாலை கொண்டு வந்த மாற்றங்களால் ஒவ்வொரு வருடமும் ஒரு பொதுவான சந்திப்பு கூட்டம் நடைபெறுகிறது: இதனால் பெற்றோர்களுக்கும் பாடசாலைக்கும் இடையில் இருக்கும் ஒத்துழைப்பு கூடும். ஒவ்வொரு மாணவரின் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தனிப்பட்ட சந்திப்பு தேவைப்பட்டால் வருடத்தில் பல தடவை ஒழுங்கு செய்யப்பட்டு மாணவரின் பரீட்சை முடிவுகளுக்கு விபரமான விளக்கம் கொடுக்கப்படும்.

இந்த புதிய திட்டம் பிரான்சு மொழியில் ஒரு சீரேட்டதனத்தை கொண்டு வருவதற்கும், நன்றாக வாசிப்பதற்கும். இது எல்லா மாணவர்களையும் ஒரே தராதரத்திற்கு கொண்டு வரும். திறமையான மதிப்பெடுக்கும் விதத்தாலும், மாவட்ட பரீட்சையாலும் மாணவர் எல்லோருக்கும் ஒரே தராதரத்தை கொண்டு வருவதற்கு தான் இந்த திட்டம்.

மாணவர்களை திசைகளுக்குள் பிரிக்கும் போது முக்கியமான ஆதாரங்களை எடுத்து முடிவுகள் தீர்மானிக்கப்படும். ஆசிரியர்கள் பெற்றோர்களை இந்த சந்தர்பத்தில் சந்திப்பார்கள்.

9ம் ஆண்டு உயர்கல்விப் பிரிவின் (VSB) இறுதியில் அளிக்கப்படும் சான்றிதழ்களிற்கான புதிய நிபந்தனைகள் 1ம் திகதி ஆவணி 2010 சேர்த்துக் கொள்ளப்பட்டது. இம்மாற்றமானது பொதுவான தரக்கணிப்பீட்டுக் கோப்பில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது சேர்த்தக் கொள்ளப்படுவதுடன் இக் கையேடானது அதன இரண்டாவது பதிப்பாகும்.

இளைஞர்களின் படிப்பு சம்பந்தமான திணைக்களம் படிப்பு விடயங்களில் பிரயோசனமான மதிப்பீட்டை கொண்டு வருவதுடன் சட்டங்களுக்கு மதிப்பு கொடுப்பதை கவனிக்கும். இத் திணைக்களம் பள்ளிக்கூடப்படிப்பு திட்டத்தில் ஒரு முன்னேற்றத்தையும், பெற்றோர்களுடன் ஒரு நல்ல தொடர்பையும் கொடுக்கும்.



**Anne-Catherine Lyon**

மாநிலத்தின் கல்வி திட்ட அதிகாரி
இளைஞர்களின் படிப்பு சம்பந்தமான திணைக்களம

# 1. ஏன் மதிப்பீடு செய்வது?

### ▶ மாணவர் கற்கும் கல்வி முறையை முன்னேற்றுவதற்கு உதவி செய்தல்.

இதன் நோக்கம், மாணவருக்கு தேவையானவற்றை படிப்பித்தல், கல்வியை கற்றுக்கொள்ள உதவியாகவே கணிப்பிடுதல் நடைபெறும். இது மாணவருக்கு முன்னேற்றத்தை கொண்டு வருவதற்கும், ஆசிரியருக்கு படிப்பிக்கும் விதத்தை விசேடமாக செய்வதற்கும். இதனை தான் படிப்பு சம்பந்தமுள்ள கணிப்பீடு என்பது.

### ▶ மாணவரின் படிப்பின் முன்னேற்றத்தை கணக்கெடுத்து அவரின் வகுப்பு ஏற்றும் முடிவுகளை தீர்மானிப்பது.

வருடத்தில் பல தடவைகள் அவர்கள் கற்றுக்கொண்டதையும் அதில் உள்ள குறை நிறைவுகளையும் விளங்கிக்கொள்வதற்கு தான் இந்த கணிப்பீடு.

இது மூன்று முடிவுகளை கொடுக்கும். ஒரு வகுப்பிலிருந்து அடுத்த வகுப்புக்கு ஏற்றப்படுதல், ஆறாந்தரக் கடைசி பகுதியில் பிரிவுகளாக பிரிக்கப்படுதல், ஒன்பதாந்தர கடைசியில் பரிட்சை முடிவுக்கான சான்றிதழ் வழங்கப்படுதல்.

### ▶ ஒரு நடுநிலையான மதிப்பீட்டு முறையையும் நல்ல தரமான கல்வி திட்டத்தையும் இது நிச்சயப்படுத்தும்.

மாநில கணிப்பீடு பாடசாலை திட்டத்தை நல்ல தரமான நிலைக்குக் கொண்டு வர உதவி செய்யும். மாநிலத்தின் பாடசாலை திட்டத்தில் ஒரே மாதிரியான திட்டத்தையும், கட்டாயமான கணிப்பீட்டையும் கொண்டு வருவதற்கு (ECR) மாநில பரிட்சை தேவையான தகவல்களை கொடுக்கிறது.

# 2. என்னத்தை மதிப்பிடுவது?

### ▶ எதிர்பார்க்கும் படிப்பை அடைதல்

இது மாணவருடைய வேலையில் எதிர்நோக்குகிற கணிப்பீட்டை கணிக்க உதவி செய்கிறது.

### ▶ பாடசாலைப்படிப்பு வேலையின் நோக்கம்

இது அடிக்கடி வழக்கமாக அவதானிக்கப்படுவதால் அவர்களின் தனிப்பட்ட வேலையிலும் கூட்டமாக செய்யப்படும் வேலையிலும் கவனிக்கப்படும்.

### ▶ மாணவரின் நடத்தைகள்

பாடசாலையில் மாணவரின் நடத்தைகளை பள்ளிக்கூட சட்டத்தின் முறையில் மதிக்கப்படுவதை கவனிக்கப்படும். இப் பாடசாலை சட்டங்கள் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் அறிவிக்கப்படும்.

இந்த ஒழுங்கு முறைகளை அனுசரிக்காவிட்டால் மாணவர்களுக்கு தண்டனை கொடுக்கப்படும்: கூடுதலான வீட்டுப்பாடம் கொடுக்கப்படும், வகுப்பில் தடுத்து வைக்கப்படுவார், சில குறிப்பிட்ட நாட்களுக்கு பாடசாலையிலிருந்து வெளியேற்றப்படலாம் அல்லது நிரந்தரமாகவும் வெளியேற்றப்படலாம்.

# 3. எப்படி மதிப்பிடுவது?

### ▶ முக்கிய பரீட்சை மூலமாகவும் பொதுவான பரீட்சை மூலமாகவும்

பாடசாலை வேலைகளின் பெறுபேறுகள் திட்டமான முறையில் கணிக்கப்பட்டு பாடசாலை கால முழுவதுடமும் பங்கிடப் படும். இந்த வேலை முறையானது மாணவரின் தகுதியையும் அவர்களுக்குரிய இயலும் தன்மையையும் கொடுக்கப்பட்ட வேலையில் அவர்கள் தெரிந்து கொண்டவற்றை சரியான முறையில் உபயோகிக்கிறார்களா என்பதும் அளவிடப்படும்.

இந்த பரீட்சைகள் கணிப்பெடுபதற்கு மிகவும் முக்கியமானவை.

மாணவரின் கல்வி திறமையை தெரிந்து கொள்வதற்கு பல பொதுவான பரீட்சைகள் செய்யப்பட்டு அதற்கு புள்ளிகள் வழங்கப்படும். எந்தப் பாடத்தில் என்றும் மாணவர் அதை எப்படி செய்கிறார் என்றும் கவனிக்கப்படும். இந்த சிறிய வேலையின் முடிவுகளானது பெரிய முக்கியமானதல்ல எனினும் கடைசியில் எல்லா சிறிய வேலைகளின் கூட்டு மொத்தமான சராசரி வேலையே ஒரு முக்கியமான திட்டமான முடிவாக எடுக்கப்படும்.

ஆசிரியர் முதலே இந்த பரீட்சை பற்றி அறிவித்தலை கொடுத்து எப்படி முடிவுகளை தயாரித்து பரிமாறுவதையும் தெரியப்படுத்துவார்.

## ▶ மாநில பரீட்சை அத்தாட்சிகளால் (ECR)

மாநில பரீட்சைகளை மாநில திணைக்களம் தயாரிக்கிறது. இது மாநிலத்திற்குள் ஒரே மாதிரியாக தயாரிக்கப்படுகிறது. அந்த வருட வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களுக்கும், அதே திகதியில் ஒரே கட்டுப்பாடுடன் நடாத்தப்படும்.

மாணவரின் மாநில பரீட்சை முடிவுகள் பெற்றோர்களுக்கு தெரிவிக்கப்படும். அவர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வி தகுதியை மாநில மட்டத்திலுள்ள தகுதியுடன் இருப்பதை தெரிந்து கொள்வார்கள். இந்த முடிவுகள் மாணவரை ஒரு வகுப்பிலிருந்து மற்ற வகுப்பிற்கு ஏற்றப்படுவதற்கும், கடைசியில் பிரிவுகளாக பிரிக்கப்படுவதற்கும், ஒன்பதாந்தரக் கடைசியில் பரீட்சை முடிவுக்கான சான்றிதழ்களை வழங்கவும்.

## ▶ மாணவர் வகுப்பில் வேலை செய்யும் தன்மையை கணித்தும், அத்துடன் வகுப்பில் மாணவரின் நடத்தையையும் கணித்தல்.

மாணவரே தான் வகுப்பில் வேலை செய்யும் தன்மையை கணித்து தனது அபிப்பிராயத்தை சொல்ல வேண்டும். மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் விளங்கிக் கொள்வதற்காக சில குறிப்புகள் வேலை செய்த தாளில் அல்லது ஞாபக புத்தகத்தில் குறிக்கப்படும்.

வழக்கமாக மாணவரின் பழக்க வழக்கங்களை பற்றி ஆசிரியர் நேரடியாக மாணவரிடம் கூறுவார் அல்லது ஞாபக புத்தகத்திலும் எழுதி விடுவார்.

# 4. எப்படி முக்கியமான பரீட்சை முடிவுகளை தெரிவிப்பது?

## ▶ ஆரம்பபாடசாலை முதலாம் வகுப்பிலிருந்து நாலாம் வகுப்பு வரை, கணிப்பிடும் மூலமாக

ஆசிரியர்கள் ஐந்து விதமான கீழ்வரும் படிமுறைகளை கணிப்பிடுவதற்கு உபயோகிக்கின்றனர்.

- தெரியவேண்டியவற்றை மிகவும் திறமையாக தெரிந்து கொள்வது (LA)
- தெரியவேண்டியவற்றை சுலபமாக தெரிந்து கொள்வது (AA)
- தெரியவேண்டியவற்றை தெரிந்து கொள்வது (A)
- தெரியவேண்டியவற்றை ஒரு பகுதி மட்டும் தெரிந்து கொள்வது (PA)
- தெரியவேண்டியவற்றை இன்னும் அடையவில்லை (NA)

கல்வி காலவட்ட முடிவில் இந்த கணிப்பீடுகள் வகுப்பு ஏற்றும் முடிவுகளுக்கு பாவிக்கப்படும்.

## ▶ மேல் வகுப்பில், புள்ளிகள் மூலமாக

கல்வி காலவட்ட மாற்றும் வகுப்புகளில் ஆசிரியர்கள் 1~6 வரை யான புள்ளிகளையும் உபயோகித்து அரைவாசி புள்ளிகளையும் உபயோகிக்கின்றனர்.

- 4 புள்ளிகளின் அர்த்தம் என்னவென்றால்:
  தெரியவேண்டியதை மிகவும் குறைந்த அளவில் விளங்கிக் கொண்டது.
- 6 புள்ளிகளின் அர்த்தம் என்னவென்றால்:
  மிகவும் திறமையாக தெரியவேண்டியவற்றை தெரிந்து கொள்வது.
- 1 புள்ளிகளின் அர்த்தம் என்னவென்றால்:
  தெரியவேண்டியவற்றை கொஞ்சம் கூட தெரியவில்லை.

வகுப்பு வருட முடிவில் ஒவ்வொரு பாடத்திற்கும் சராசரி அரைவாசி புள்ளிகள் வரை கணக்கெடுக்கப்படும்.

# 5. மாணவர்கள் வகுப்பை கடக்கும் பொழுது எப்படி முடிவுகள் எடுக்கப்படும்?

### ► கல்வி காலவட்ட முதல் ஆரம்பவகுப்பிலிருந்து நாலாம் வகுப்பு கடைசியில் அடுத்த வகுப்பிற்கு உயர்த்தப்படல்.

பொதுவாக ஒவ்வொரு கல்வி காலவட்ட ஆரம்ப படிப்பும் இரண்டு வருடம் நடைபெறும். ஒவ்வொரு கல்விகால வட்டக்கடைசியிலும் தெரியவேண்டியவற்றை தெரிந்து கொண்டார்களா என்பது முக்கியமான அபிப்பிராயமாக இருக்கும். இல்லையெனில் ஆசிரியர் பெற்றோருடன் சேர்ந்து நிலைமையை பரீட்சிப்பார். ஒவ்வொரு கல்வி கால வட்டத்திலும் ஒவ்வொரு வருடத்திலும் வகுப்பு உயர்த்தப் படுதல் இயற்கையாகவே நடைபெறும்.

முதலாவது ஆரம்ப பாடசாலை கல்விகால வட்ட முடிவில் (CYP1) மாணவர் கட்டாயமாக வாசிக்க தெரிந்திருந்தால் தான் இரண்டாவது கல்விகால வட்டத்தை தொடரலாம். (CYP2)

ஆசிரியர் கூட்டத்தில் தான் வைத்து, மாணவரை வகுப்பு உயர்த்துவதோ இல்லையோ என தீர்மானிக்கப்படும்.

### ► சிறுவகுப்பிலிருந்து பெரிய வகுப்புக்கு போகும் இடையில் இருக்கும் கல்விகாலவட்ட வகுப்பு முடிந்த கடைசியில் திசைகளை குறித்தல்.

திசைகளை குறிக்கும் பொழுது பல திட்ட அளவுகளை பற்றி யோசனை பண்ணப்படுகிறது. உண்மையான விபரம் சிரேஷ்டதனத்தை வரிசைப் படுத்துகிறதை, முன்னேற்றம் கல்விகால வட்ட சுற்றில் நிச்சயப்படுத்தப்படுகிறதை, பொருத்தமாக இருப்பதை, புதிய திட்டத்தில் கற்றுக்கொள்ளும் விதம் மாணவருக்கு படிப்பின் வேலையின் நிலையில், மாணவரின் பொதுவாக நோக்கத்தை கவனிக்கப்படும்.

6ம் வகுப்பில் தை மாதம் வகுப்பு பிரிவின் ஆலோசனை குழு முதலாவது கணிப்பு பெற்றோர்களுக்கு அறிவிக்கப்படுவது பொதுவழக்கம். ஒரு சந்திப்பு செய்ய விடுவதால் பெற்றோர்களும், ஆசிரியர்களும் ஒன்றாக கூடி நிலைமையை அலசி ஆராய்ந்து எது மாணவருக்கு மிகவும் சிறந்த பிரிவாக இருக்கலாம் என்றதை கூடுதலாக சொல்லுவார்கள்.

பின்பு வைகாசி மாதத்தில் வகுப்பு பிரிவின் முடிவுகளை வகுப்பின் ஆலோசனை குழு அவர்களின் காரணங்களை தெரிவித்து தெளிவான விடயத்தை அனுப்பப்படும். இரண்டாவது சந்திப்பு ஒன்று ஒழுங்கு செய்யலாம்.

பெற்றோர்கள் உடன்படாது விட்டின் கடிதத மூலமாக தெரிந்து கொண்ட பின், ஆசிரியர்களின் சந்திப்பு மாணவரினுடைய வகுப்பு பிரிவுகளை பற்றி தீர்மானித்து 7இல் இருந்து 9ம் வகுப்புகளிற்குள் மூன்றில் ஒரு வழிக்கு வரிசைப்படுத்தப்படுவார். (VSO,VSG,VSB)

## ▶ 7ம் 8ம் ஆண்டு இறுதியில

மாணவர் கடைசி வருடபடிப்பு முடிவில் அத்தாட்சி பத்திரம் ஒன்றை அடுத்த வகுப்புக்கு போக முதல் பெறுவார்கள். எல்லா பாடத்திலும் 3 புள்ளிகள் குறைவாக கிடைக்காவிட்டால் வகுப்பு ஏற்றப்படுவார். இதில் கூடினது 2 புள்ளிகள் தான் கனிதப் பாடத்திற்கும், பிரெஞ்சு மொழிக்கும் கிடைக்க வேண்டும்.

7ம் வகுப்பின் கடைசியில் மாணவரின் புள்ளிகள் திறமையாய் இருந்தால் அவர் VSO லிருந்து VSG க்கு அல்லது VSG லிருந்து VSB க்கு மீண்டும் திசை திருப்பபடலாம். சில நடைமுறைகளை கடைப்பிடித்தால் மட்டும்:

- ஒரே பிரிவில் மாணவர் அந்த வருடத்திலிருந்து மற்ற வருடத்திற்கு மாறலாம்.
- ஆகக்குறைந்தது 15 புள்ளிகள் கனிதம், பிரெஞ்சு, அயல்நாட்டு மொழியில் கிடைத்திருந்தால்.
- பெற்றோர்கள் இதன் பின் மாற்றத்தை கேட்டால்

## ▶ 9ம் ஆண்டு இறுதியில

மாணவர்கள் பின்வரும் இரண்டு விடயங்களைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் கட்டாயக் கல்வித தேர்ச்சிக்கான (9ம் ஆண்டு) சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வார்கள்.

### பொதுவான பிரிவில் (VSG) அல்லது 3ம் பிரிவில் (VSO)

சகல பாடங்களினது மொத்தப் பெறுபேற்றில் −3 புள்ளிக்குக் கூடாமலும் இருக்க வேண்டும். அதிலும் கூடியது −2 புள்ளியாகவும் பிரஞ்சு கனிதம் ஆகிய பாடங்களில் இருக்கவேண்டும்.

### உயர்கல்வி பிரிவு (VSB)

சகல பாடங்களினது மொத்தப் பெறுபேற்றில் −2 புள்ளிக்குக் கூடாமலும் இருக்க வேண்டும். அதிலும் கூடியது −1 புள்ளியாகவும் பிரஞ்சு கனிதம் ஆகிய பாடங்களில் இருக்கவேண்டும்.

## ▶ 9ம் தரக்கடைசி வருடத்தில் கிடைக்கப்பெறும் சான்றிதழ்

ஒவ்வொரு பாடங்களில் எடுத்த புள்ளிகளின் சராசரியையும் பரீட்சையின் புள்ளிகளையும் கணக்கெடுத்து சான்றிதழ் வழங்கப்படும். இந்த பரீட்சையின் மதிப்பு 3 பிரிவில் ஒரு பங்கு மதிப்பிடப்படும்.

சான்றிதழ் கிடைக்கப் பெறாத மாணவர்கள் வருட படிப்பின் முடிவில் ஒரு அத்தாட்சி பத்திரத்தை பெறுவார்கள்.

# 6. சில பிரதானமான நிலைமைகள்

சில விசேடமான நிலைமைகளால் ( வெளிநாட்டினர், சொந்த நாட்டு மொழி பேசுபவர், வியாதி, வலது குறைந்தவர்,..), இவைகளில் வேறு பாடங்களில் முன்னேற்றம் இருப்பதை கவனிக்கும் பொழுது. இங்கே வழக்கமாக கணிப்பெடுக்கும் முறை இவைகளுக்கு மிகவும் கட்டுப்பாடானதாக இருக்கலாம்.

அதனால் வகுப்பு ஏற்றுவதற்கு மாணவர்களின் பரீட்சை புள்ளிகளை விட வேறு திறமைகளை பார்த்து ஆலோசித்து முடிவை வழங்குவர்.

# 7. ஆவணங்கள்

## ▶ ஞாபக அல்லது செய்காரிய புத்தகம்

ஞாபக புத்தகம் பாடசாலைக்கும் பெற்றோர்களுக்கும் இடையில் ஒரு ஆவணம் இதன் மூலமாக ஒரு தொடர்பை ஏற்படுத்துகிறது. குணாதிசயங்களை நன்றாக அறிதல் முக்கியமான பரீட்சை முடிவின் புள்ளிகளுக்கு கடைசியில் அர்த்தமாக அமைக்கப்படும்.

## ▶ வருட படிப்பின் புத்தகம்

வருட படிப்பின் புத்தகம் மாணவரினுடைய கடைசி கல்வி வட்டப் பகுதியில் கிடைக்கும் முடிவுகளை உள்ளடக்கியதாகவும், இது வருடப்படிப்பின் செல்லும் வழிச்சுற்றையும் குறித்து படிப்படியாக முடிவு எடுக்கப்படும்.

## ▶ மதிப்பீட்டின் கடுதாசி கட்டு

மதிப்பீட்டின் கடுதாசி கட்டின் முடிவு பாடசாலைக்கும் பெற்றோருக்கும் இடையில் ஒரு சம்பா சனைக்கு துணை போகிறது. வருடபடிப்பு புத்தகத்துடன் மாநில பரீட்சை சோதனைகள் (ECR) மாணவரின் முன்னேற்றங்களை காட்டும் வேலைகள் இருக்கும். இதற்குள் புத்தி ஒழுக்கம், தேகப்பயிற்சியின் விளையாட்டுக்களின் சேவை ஆவணங்களும் உள்ளது.

# 8. பெற்றோரின் உரிமைகள் என்ன?

ஒவ்வொரு வருட படிப்பின் தொடக்கத்திலும் ஒரு கூட்டம் பெற்றோர்களின் அபிப்பிராயங்களுக்காக தகவல்களை கொடுக்க ஒழுங்கு செய்யப்படும். இதன் முக்கியமான வழி தெரிய வேண்டியவை வேரமாநிலத்தின் படிப்பு திட்டங்களால் PEV, மதிப்பீட்டின் தன்மை வகுப்பறையில் நாளாந்தம் கடைப்பிடிக்கும் ஒழுங்குகள். இந்த ஆதாரங்கள் ஒரு நல்ல பாடசாலை படிப்பை தொடர உபயோகப்படுகிறது.

இன்னும் கூடுதலாக மாணவர் வகுப்பில் செய்யும் வேலைகளையும் அதற்கு வழங்கப்படும் புள்ளிகளையும் பெற்றோர்களுக்கு ஞாபக புத்தகம் மூலமாகவும், மாணவரின் வேலைகள் மூலமாகவும் தெரிவிக்கப்படும்.

பாடசாலைக்கும் குடும்பத்திற்கும் இடையில் இருக்கும் ஒரு நல்ல இணைக்கத்தால் மாணவரின் முன்னேற்றத்திற்கு துணை போகிறது. அதாவது பெற்றோர்களோ அல்லது ஆசிரியர்களோ கேட்டால் தேவையாயின் ஒரு தனிச்சந்திப்பு நடைபெறும். இது முக்கியமான வேளையில் தொழிலை கற்றுக்கொள்ளுதலில் முன்னேற்றமும், திருப்தியும் இல்லாவிட்டில் அல்லது மாணவரின் நல்நடத்தையும் நல்ல தொடர்புகளையும் கொண்டு வருவதற்கு கஷ்டங்கள் இருந்தால்.

### ► எடுத்த முடிவுகளுக்கு எதிராக தீர்மானிக்கும் உரிமை

பாடசாலையிலிருந்து மாணவரை வெளியேற்றும் முடிவு, வேறு தண்டனைகளை கொடுக்கும் முடிவுகள் மாணவரின் வருடப்படிப்பின் வழிச்சுற்றின் முடிவுகள் கல்லூரி ஸ்தாபனம் எடுக்ககலாம். இவைகள் எடுக்கும் இந்த முடிவுகளுக்கு எதிராக பெற்றோர்கள் மீண்டும் மேலான நீதி கேட்கலாம்.

# 9. பெற்றோரிடமிருந்து பாடசாலை எதிர்பார்ப்பது என்ன?

படிப்பித்தலின் அதிகார கட்டளை 3 என்ற பாடசாலை சட்டத்தின் மூலம் படிப்பு சம்பந்தமான விடயங்களில் இருக்கும் பெற்றோரின் பங்கின் நியாயங்களை அறிந்து கொள்ளலாம். இச்சட்டத்தால் பாடசாலையின் கடமை மாணவருக்கு கல்வியை வழங்குவது.

மாணவரின் படிப்பு காலம் நல்ல முறையில் நடப்பதற்கு பெற்றோர்களுடன் ஒரு சம்பாசனைதேவை. சுவிஸ் குடியுரிமை சட்டம் 302, «பெற்றோர்கள் கட்டாயமாக நல்ல முறையில் பாடசாலையுடன் ஒத்துழைக்க வேண்டும்».

ஞாபக புத்தகம் மூலமாக பரிமாறப்படும் தகவல்களை பெற்றோர்கள் கட்டாயம் வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும். மாணவர் பரீட்சை தாள்களை கொண்டு வரும் பொழுது அதிலிருக்கும் பரீட்சை முடிவுகளின் புள்ளிகளை தெரிந்து கொண்டது என பெற்றோர்கள் ஒவ்வொரு கிழமையும் கை ஒப்பம் இடுதல் வேண்டும்.

# 10. தனியார் பாடசாலையிலிருந்து எப்படி அரசாங்க பாடசாலைக்கு செல்வது பற்றிய விளக்கம்.

தனியார் கல்லூரியில் படித்த மாணவர் அல்லது வீட்டில் படிப்பித்து கொண்டு வந்த மாணவரை பெற்றோர்கள் அரசாங்க கல்லூரியில் பதியலாம். படிப்பு தொடங்கும் வருடத்தின் சித்திரை மாதத்தில் பெற்றோர்கள் பாடசாலை ஸ்தாபனத்திற்கு கடிதம் மூலமாக அவர்கள் வசிக்கும் இடத்தை தெரிவிக்க வேண்டும். மாணவரின் வயது, மாணவரின் சாமர்த்தியத்தை தெரிந்து எந்த வகுப்பில் அவரை பதிந்து விட வேண்டும் என்றதை சிரேஷ்ட நடத்துனர் முடிவு எடுப்பார்.

7ம், 8ம், 9ம் வகுப்புக்கு வயதின் அடிப்படையில் போகும் மாணவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் வைகாசி மாதம் ஒரு மாவட்ட பரீட்சை நடப்பதால் மாணவர் எந்த பிரிவுக்கு செல்லுவார் என்பதை நிச்சயப்படுத்தலாம்.

அத்துடன் தனியார்பாடசாலையில் இருந்து பொதுமக்களிற்கான (அரச) பாடசாலைகளிற்கு வரும் மாணவர்களிற்கான நடைமுறையானது பொதுமக்களிற்கான (அரச) பாடசாலை மாணவர்களிற்கான நடைமுறை போன்றதே. உதாரணமாக வகுப்பேற்றப்பட்ட அல்லது சான்றிதழைப் பெற்ற மாணவர் மீண்டும் அதே வகுப்பில் கல்வி கற்க முடியாது.

# சேர்க்கப்படும் தகவல்கள்

## எங்கே விபரங்களை சேர்ப்பது?

பிள்ளைகளை பற்றிய விபரங்களை தெரிந்து கொள்வதற்கு பெற்றோர்கள் முதலில் பிள்ளையின் ஆசிரியருடன் கதைத்தல் வேண்டும், அதற்கு பின் பிள்ளை போகும் பாடசாலையின் அதிகாரத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும். விசேஷமான நிலைமை ஏற்பட்டால் கட்டாயமான படிப்பின் பொதுவான அதிகாரத்துடன் (DGEO) தொடர்பு கொள்ள வேண்டும்.

கல்வி திட்டத்துடன் சம்பந்தப்பட்ட புத்தகங்களோ, சிறிய தகவல்கள் உள்ள சிறு புத்தகங்களோ DFJC/DGEO இதன் இணையத்தளத்தில் எடுக்கலாம்.

DFJC/DGEO இன் இணையத்தளத்தில் தேவைப்படும் தகவல் புத்தகங்களை எடுக்கலாம். படிப்பு சம்பந்தமான சட்டம், அதை பாவிக்கும் விதம் வோமாநிலத்திலிருக்கும் படிப்புகள். (PEV)

**பாடசாலைக் கல்விச் சட்டம். பாடசாலை ஒழுக்கு முறை, மற்றும் பொதுவான தரக்கணிப்பீட்டு முறை போன்றவற்றை அறிந்து கொள்ள பின்வரும் இணையத்தளத்தைப் பயன்படுத்தலாம்.**

**www.vd.ch/dgeo → Lois et règlements**

**வோ மாநிலத்தில் பயிற்ச்சிகள் பற்றிய விளக்கத்திற்கு பின்வரும் இணையத்தளம.**

**www.vd.ch/dgeo → Ressources pédagogiques**

# அகராதி

**வகுப்பினுடைய தீர்மானம்:** ஓரே வகுப்பில் கற்பிக்கப்படும் ஆசிரியர்களால் நடாத்தப்படும் கூட்டம்.

**பாடசாலையில் படிப்பிக்கும் ஆசிரியர்களின் சந்திப்பு:** ஓரே கல்லூரி ஸ்தாபனத்தின் ஆசிரியர்களால் நடாத்தப்படும் கூட்டம்.

**வோமாநிலத்தின் படிப்புதிட்டம (PEV):** ஒவ்வொரு மாணவரும் தெரிய வேண்டியதை தெரிந்து ஒவ்வொரு வட்டத்தையும் படிப்படியாக தெரிந்து கட்டாய பாடசாலைக்கு போதல்.

**கட்டாயமாக தெரியவேண்டியவை:** ஒரு மாணவர் ஒரு வகுப்பிலிருந்து அடுத்த வகுப்பிற்கு போவதற்கு கட்டாயமாக தெரிந்து இருக்க வேண்டியவை.

**எதிரான புள்ளிகள்:** 4க்கு குறைய இருக்கும் புள்ளிகளையும் அதன் அரைவாசி புள்ளிகளையும் சேர்த்தல்.

**உதாரணம்:** 3 புள்ளிகள் = 1 எதிரான புள்ளி; 2.5 புள்ளிகள் = 1.5 எதிரான புள்ளி.

**VSO:** Tamil: இந்த வழியில் போகும் மாணவர்கள் கூடுதலாக தொழில் பழகும் படிப்பினை செய்வார்கள்.

**VSG:** Tamil: இந்த வழியில் போகும் மாணவர்கள் கூடுதலாக தொழில் பழகும் படிப்பையும், பல்கலைக்கழகம் போகாது வேறு படிப்புக்கும் போதல்.

**VSB:** Tamil: முக்கியமாக பல்கலைக்கழகம் போகலாம் நீண்ட படிப்பை செய்யலாம்.

# வோ மாநிலத்திற்குள் உள்ள உருவாக்கம்




1 MSSP: விசேஷமான தேர்ச்சி, பிள்ளைகளின் படிப்புக்குரிய சமூகவியல் குறித்து சொல்வது

2 MPC: வர்த்தக தொழிலுக்குரிய தேர்ச்சி

3 தொடர்ச்சிக்கான வரையறைத் திட்டம் 1 ஆனது எதிர்காலத்திட்டம் அல்லது தொழில்க் கல்வியில்லாத மானவர்களிற்கு மாத்திரமே.தற்கான அனுமதி கிராமிய காரியாலயங்களினூடாகவே வழங்கப்படும


**வோமாநிலம் பிரதான கல்வித்திணைக்கழ முகவரி**
Direction générale de l’enseignement obligatoire (DGEO)
Rue de la Barre 8, 1004 Lausanne • Tél. 021 316 32 50 • Fax 021 316 32 55
info.dgeo@vd.ch • www.vd.ch/dgeo


CADEV 114065